# அடுத்த சுதந்திரதினக் கொண்டாட்டம் திருமலையில்

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 215
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆவணி 29 ஜு அல். 9 வியாழக்கிழமை [14-9-67]

கொழும்பு, புதன்

1968-ம் ஆண்டு பெப்ரவரி 4-ம் திகதி இலங்கையின் சுதந்திர தினக்கொண்டாட்டம் திருக்கோணமலையில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சுதந்திரதினத்தை பல்வேறு நகரங்களிலும்கொண்டாடவேண்டுமென்ற தீர்மானத்துக்கிணங்க காலியிலும் குருநாகலிலும் முன்னர் கொண்டாடப்பட்டது. இம்முறை சுதந்திரதினத்தை கிழக்கு மாகாணத்தில் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் சுதந்திரதினத்தைக்கொண்டாடுவதென முன்னர் தீர்மானிக்கப்பட்டபோதிலும் இப்பொழுது திருக்கோணமலையிலேயே அடுத்த சுதந்திரதினத்தைக் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

# மாவட்டசபை பற்றி ஆளும் கட்சித்தலைவர்கள் ஆலோசனை

## புதிய கல்வித் திட்டம் பற்றியும் விவாதித்தனர்

கொழும்பு, புதன்

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சித் தலைவர்கள் இன்றிரவு அலரி மாளிகையில் பிரதமர் திரு. டட்லிசேனநாயகா தலைமையில் சந்தித்து மாவட்ட சபை மசோதா, புதிய கல்வித்திட்டம் ஆகியவை பற்றி விவாதித்தனர்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தனு வெளிநாடு சென்றிருப்பதால் அவர் தவிர்ந்த இதர கட்சித்தலைவர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டனர்.

மாவட்டசபைகள் பற்றியே இம்மகாநாட்டில் பெரிதும் பேசப்பட்டதாகத் தெரிகிறது. அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் கட்சிகள் தமக்குள் உள்ள வேறுபாடுகளைப் பேசித்தீர்த்து ஒரு நல்ல முடிவுக்கு வருவது நல்லதெனப் பிரதமர் ஆரம்பத்தில் கூறினாராம். மாவட்டசபை மசோதாவுக்கு தாங்கள் விரும்பியபடிவாக்களிக்க அனுமதிக்க வேண்டுமென கிழக்கு மாகாண எம்.பி.க்கள் சிலரின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கை பற்றியும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## சங்கானை துப்பாக்கிச் சூட்டு வழக்கில் எதிரி விடுதலை

காங்கேசன்துறை, புதன்

சங்கானை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையொட்டி கைதுசெய்யப்பட்ட செல்லமுத்து செல்வரத்தினம் என்ற நபர் விடுதலைசெய்யப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கு காலமான சின்னர் கார்த்திகேசு என்பவரது மரணம் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் சங்கானைப் பொலிஸாரால் மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவ்வழக்கை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். திற்சிங்கா விசாரணை செய்தார்.

காலஞ்சென்றவரைபிரேத பரிசோதனைசெய்த யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியைச்சேர்ந்த டாக்டர் இரத்தினசபாபதி திருநாவுக்கரசு சாட்சியமளிக்கையில் காலஞ்சென்றவர் சென்ற மாதம் 7-ம் திகதி துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் யாழ்ப்பாணம்பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் சென்றமாதம் 15 ம் திகதி அங்கு மரணமானுர் என்றும் குண்டு மேற்படிநபரது பின்கழுத்துப்புறமாகப் புகுந்து அவரது முன்வாய்ப் புறமாக வந்திருந்தது என்றும் அதிக இரத்தப்பெருக்கினுலும் அதிர்ச்சியினுலுமே இம்மரணம்சம்பவித்ததென்றும் கூறினுர்.

முருகன் வைரவன் சாட்சியமளிக்கையில், சந்தேக நபர் துப்பாக்கி ஒன்றுடன் வெளியேவந்து காலஞ்சென்றவரின் பக்கத்தை நோக்கி முன்புறமாக நின்று சுட்டாரென்றும் உடனே காலஞ்சென்றவர் நிலத்தில் கீழே விழுந்துவிட்டாரென்றும் இதனைக் கண்டதும் நான் பயந்து எனது வயலைநோக்கி ஓடிவிட்டேனென்றும் பின் நடந்தது என்னஎன்றுதனக் தெரியாது என்றும் கூறினுர்.

விசாரணையின்பின் மாஜிஸ்திரேட் சந்தேகநபரை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

"ஐ. நா. வில் சீனு இல்லாதது

## பிரதம அதிதி இல்லாத பொதுவிருந்து போலாகும்"

— கிருஷ்ணமேனன்

வெள்ளவத்தை, புதன்

"இந்தியா தனது கூட்டுச் சேராக்கொள்கையை விட்டு என்றைக்குமே விலகப் போவதில்லை. கூட்டுச் சேராக் கொள்கையைக் கடைப்பிடித்த போதிலும் வேறு நாடுகளின் அத்துமீறிய தலையீடுகள் இந்தியாவுக்கு ஏற்படுமானுல் அவற்றை எதிர்க்கவும் இந்தியா என்றைக்கும் தயாராக இருக்கிறது".

இவ்வாறு முன்னுள் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் கொள்ளுப்பிட்டி செஞ்சிலுவைச்சங்க மண்டபத்தில் நடைபெற்ற பகிரங்க சொற்பொழிவில் பேசுகையில் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "ஐக்கிய நாடுகள் சபையில் சீனு அங்கம் வகிக்காதது பிரதமவிருந்தினரில்லாத பொது விருந்து போலாகும். ஐ. நா. சபையில் சீனு அங்கம் வகிக்க வேண்டும் என்று இந்தியா மிக நீண்டகாலமாகக் கூறி வருகிறது" என்ருர்.

---

### சமரச மகாநாடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

சங்கானையில் நேற்றுமாலை நடைபெறவிருந்த சமரச மகாநாடு மீண்டும் அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஒரு சில அரசியல் கட்சி பிரமுகர்கள் இச்சுமுகமான முடிவுக்கு ஒத்துவராமையே மீண்டும் ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணம் எனத் தெரிகிறது.

[illegible]

## சிங்கள சினிமா நடிகருக்கு 'மக்கள் அன்பன்' பட்டம்

### தமிழ்க் கலைஞர் சார்பில் உள்ளூராட்சி அமைச்சர் வழங்கினுர்

வெள்ளவத்தை, புதன்

"சிங்களத் திரைப்பட நடிகர் திரு. காமினி பொன்சேகா சிறந்த கலைஞன். இத்தகைய தரம்வாய்ந்த ஒரு சிங்களக் கலைஞருக்குப் பட்டமளித்துத் தமிழ் கலைஞர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பாராட்டுவதையிட்டு மிகவும் பெருமைப்படுகிறேன். இந்நாட்டில் தமிழ் மக்களதும் சிங்கள மக்களதும் ஒற்றுமை மேலும் பலமடைவதற்கு இது ஒரு முக்கிய சின்னமாகும். இலங்கையில் தமிழராகிய நாம் நல்ல பல நாடகங்களைத் தயாரித்துப் புதிய அரசியல் சமுதாய வளர்ச்சிக்கு உதவ

[6-ம் பக்கம் பார்க்க]

## 'எதிரிகளின் பெயர்களை எவருக்கும் கூறவில்லை'

### உருத்திரபுரம் இரட்டை கொலைவழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், வியா.

சூடுவிழுந்தபொழுது அக்கா தனலட்சுமியும், அண்ணன் துரைச்சாமியும், மச்சான் சுப்பிரமணியமும் அங்குநின்ருர்கள். எவருக்கும் 1-ம் எதிரி இரத்தினம் சுட்டதைக் கண்டதாகக் கூறவில்லை. சம்பவம் நடந்தவுடன் எதிரிகளின் பெயரை எவருக்கும்நான்கூறவில்லை.'

உருத்திரபுரம் இரட்டைக் கொலைவழக்கில் சாட்சியமளித்த அமரசிங்கம் பேற்கண்டவாறு கூறினுர். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர்வி. மாணிக்கவாசகர்முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

(6-ம் பக்கம் பார்க்க)

# வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது?

கொழும்பு, புதன்

பொது வேலை நிறுத்தம் ஒன்றுக்கு ஆயத்தம் செய்து வந்த எதிர்க்கட்சிகள் அந்த யோசனையையும் திட்டத்தையும் கைவிட்டுவிட்டார்களென்றும் வேலைநிறுத்தம் இப்போது அவசியமில்லையென தொழிற்சங்கங்களுக்குத் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

தொழிற்சங்கங்களின் கருத்துக்களை அறிந்த பின்னரே வேலைநிறுத்த யோசனை கைவிடப்பட்டதாக தெரியவருகிறது.

[illegible] அமைக்கப்படுவதற்கான மசோதா கொண்டுவரப்படுவதையும் விலைவாசி உயர்வையும் எதிர்த்தும் நாடு முழுவதும் தீவிர பிரசாரம் செய்வதற்கு எதிர்க்கட்சியினர் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

## நன்றி நவிலல்

திருவாட்டி (Lady) இராசம்மா துரைசுவாமி

எமது தாயாரின் ஈமச்சடங்கின் போது நேரிலும் செய்தி மூலமும் அனுதாபத்தைத் தெரிவித்த நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பிள்ளைகள்.

246

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சுலபமும் உறவும் உன்னுடையவை யல்ல. அவை உன்னை விட்டு அகல்வது திண்ணம். நீ அவற்றை விட்டு அகல்வதும் திண்ணம். ஆதலால் காரிய நிகழ்ச்சியில் அவற்றை ஒட்டியும், கருத்து நிகழ்ச்சியில் அவற்றில் ஒட்டாமலும் வாழ வேண்டும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கவருடம் ஆவணி மீ 29 உ (14-9-67)

# பயனுள்ள சந்திப்பு

அரசாங்க சேவையிலுள்ள குமாஸ்தாக்களின் குறைகளை, அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து பிரதமர்தாமே ஆராய்ந்திருக்கிறார். குமாஸ்தாக்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் நேரில் விசாரித்தறிந்த பிரதமர் அவ்வகைளைப் பரிசீலனைசெய்து 'ஆவன செய்வதாக' அறிவித்திருக்கிறார். குமாஸ்தாக்கள் சங்கப் பிரதிநிதிகளும் பிரதமரும் சந்தித்துப் பேசியதால் உடனடியாகப் பயன் எதுவும் கிடைத்துவிடவில்லை. ஆயினும் அரசாங்க-தொழிற் சங்க உறவில் ஒரு நல்ல திருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய பயனுள்ள சூழ்நிலையையுருவாக்க இச் சந்திப்பு உதவுமென நம்பலாம்.

அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் யூனியனுயினும் வேறு எந்தத் தொழிற் சங்கமாயினும் தங்கள் குறைகளையும் கஷ்டங்களையும் நீக்கிக்கொள்வதற்கு வேலைநிறுத்தம் ஒன்றேதான உரிய வழியெனக் கருதக்கூடாதென்றும் பேச்சுவார்த்தைகள் மூலமே தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளமுயற்சி செய்ய வேண்டுமென்றும் நாம் இப் பத்தியில் பல தடவைகளிலும், பல சந்தர்ப்பங்களிலும் எடுத்துக்கூறி வந்திருக்கிறோம். வேலைநிறுத்தத்தினால் அரசாங்கமும் பொதுமக்களும் மட்டும் பாதிப்பதில்லை. வேலைநிறுத்தத்தில் ஈடுபடுபவர்களும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

வேலை நிறுத்தத்தினால் மட்டுமே தங்கள் குறைகளை நீங்கிக்கொள்ள முடியுமென்றும் கோரிக்கைகளை அடையலாமென்றும் ஒரு துரதிர்ஷ்டமான மனப்பான்மை இங்கு வளர்ந்துள்ளது. இதற்கு அரசாங்கமும், தனியார் துறையினரும் சந்தர்ப்பமளித்து வந்துள்ளனர்.

அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கப்பிரதிநிதிகளை அழைத்துப் பிரதமர் பேசியிருப்பது குமாஸ்தாக்கள் தங்கள் குறைகளை எடுத்துச்சொல்லவும் நிலைமையைப் பிரதமர் அறிந்து கொள்ளவும் வாய்ப்பளித்திருக்கிறது. அரசாங்கத்துக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இருக்கவேண்டிய நல்லுறவுக்கும் இதுபோன்ற சந்திப்புகள் வழிவகுப்பதாகும். இவ்விதநேரடிச் சந்திப்புக்கள் தொழிற்சங்கங்கள் அவசர முடிவு எதையும் எடுக்காமலிருக்க உதவலாம்.

அரசாங்க ஊழியர்களுக்கும் குறைகள் இருக்கின்றன என்பதை, பிரதமர்தெரிந்துகொள்ளவும், குறைகளையும் கஷ்டங்களையும் நீக்குவதற்கு அரசாங்கம் விரும்பினும் அவற்றை முற்று முழுதாக நீக்கும் நிலையில் அரசாங்கம் இல்லை யென்பதை அரசாங்க ஊழியர் உணர்ந்து கொள்ளவும் இந்தச்சந்திப்பு வழிவகுத்திருக்கலாம். இதர தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் பிரதமர் அழைத்துப்பேசினால் வேலைநிறுத்தங்களைத் தவிர்க்க வழி பிறக்கலாமென நம்பலாம்.

# இன்றுதான் குரு மாற்றம்

## சீனுவுக்குத்தான் கஷ்டம்

### வேறு நாடுகளில் மாற்றமில்லை

(கே. என். நவரத்தினம்)

குரு பிலவங்க வருடம் ஆவணி மாதம் 29-ந் திகதி [14-9-1967] வியாழக்கிழமை பிற்பகல் 1 மணி 35 நிமிடமளவில் தனது உச்சராசியாகிய கடகத்திலிருந்து நட்புராசியாகிய சிங்கத்திற்குள் பிரவேசிக்கின்றார் என யாழ்ப்பாணம் மட்டுவிலிலிருந்து வெளிவரும் திருக்கணித பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்கத்தாவிலுள்ளசோதிட ஆராச்சிநிலைய அதிபரானவரான சாஸ்திரி திரு. என். சி. லாகிரி எம். ஏ. அவர்களும் தனது 1967-ம் ஆண்டுக்குரிய பஞ்சாங்கத்தில் (Indian Ephemeris-1967) லும் குரு 14-9-67 பி. ப. ஒருமணி 35 நிமிடமளவில்தான் சிங்கராசியில் பிரவேசிப்பதாகக் கணித்திருக்கின்றார். இன்றைய விஞ்ஞான உலகில் கணிதம் மேன்மை பெற்றிருப்பதினாலும் இவ்விரு பஞ்சாங்கம் இயற்றுபவர்களும் ஒரே மாதிரிக்கணித்திருப்பதுனாலும் குரு 14-9-67 ல் தான் இடம் பெயருகிறார் எனத் துணிந்து கூறஇடமுண்டு.

உலக அரங்கில் குரு மாற்றம் சீன தேசத்திற்கு மாத்திரம் கஷ்டமான பலனைக் கொடுக்கும். மற்றைய நாடுகளில் அதிக மாற்றங்கள் குரு பெயர்ச்சியால் ஏற்பட இடமில்லை. அடுத்த ஆண்டில் [1968-ல்] ஏற்படும் சனி-ராகு சேர்க்கை பற்றியே உலகத்தலைவர்கள் கவலை கொள்ள வேண்டும்.

தனிப்பட்டவர்களுக்கு கோசார பலனில் அதிக மாற்றம் கொடுக்கமாட்டாது. அவரவர்களுடைய தனிப்பட்ட ஜாதக பலாபலன்களைக் கொண்டேய இவற்றை அறிந்து கொள்ளலாம். குரு மாற்றம் அதிக மாற்றம் தராது.

## இன்றைய பலன்

14-9-67
வியாழக்கிழமை
(ஆவணி மாதம் 29உ)

நட்சத்திரம்- உத்தராடம் இரவு 10-01 வரை. மேல் திருவோணம்.

திதி- ஏகாதசி இரவு 3-53வரைமேல்துவாதசி

சுபநேரம்-7-33—9-03

ராகுகாலம்- 1-33—3-03.

மேஷம்- பாசத் தொடர்பு, நேசக்கர இணைப்பு.

ரிஷபம்- விருந்துண்ணல், வேடிக்கைநிகழ்ச்சி.

மிதுனம்- பகைமுட்டம பாதை தவறும்.

கடகம்- பணம் குணம் சேரும், இனமும் வாழ்த்தும்.

சிங்கம்- கவலையின்தாக்குதல், காரியம் கெடுதல்.

கன்னி- வழிகாட்டிவருவார், மகிழ்வூட்டிப் பிரிவார்.

துலாம்- பிதாவழிப் பெருமை, பிறந்தகஅழைப்பு.

விருச்சிகம்- போன பணம் வரும், புதுமணம் தரும்.

தனுசு- பொருட் பிணக்கு, பொருதவரும்பகை.

மகரம்- வெற்றி உனக்கே, வேண்டியது துணிவே.

கும்பம்- பணம் பத்தும் செய்யும், பரோபகாரம்.

மீனம்- குடும்பப் புயல், அமைதி நலன் தரும்.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

# "தமிழாசிரியர் குறைகளை நீக்குவதற்கு முயலுவேன்"

## ஆசிரியர் தூதுக்குழுவிடம் திரு. ஜி. ஜி.

உரும்பராய், புதன்

இன்றுள்ள கல்விச் சூழலில் தமிழ்ப்பகுதி ஆசிரியர்களும் மாணவர்களும் படும் கஷ்டங்களைத் தாம் நன்கு உணர்வதாகவும் நாட்டின் சுபிட்சத்திற்கு உழைத்து வரும் ஆசிரியர்களின் மனநிலை குன்றுமேயானால் நல்ல கல்வியை நாட்டில் எதிர்பார்க்க முடியாதென்றும் வட இலங்கைத் தமிழாசிரியர்களதும் மாணவர்களதும் கஷ்டங்களைப் போக்கத் தம்மால் இயன்றவற்றைச் செய்வதாகவும்யாழ்ப்பாணம் எம். பி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார். பண்டிதர் ச. பொன்னுத்துரை தலைமையில் தம்மைக் கண்ட வட இலங்கைத் தமிழாசிரியர் சங்க தூதுக்குழுவினரிடமே திரு. ஜி. ஜி. மேற்கண்டவாறு கூறினார்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் அடங்கிய மகஜரை திரு ஜி. ஜி. பொன்னம்பலத்திடம் சங்கம் கொடுத்துள்ளது.

போதனமொழி தாய்மொழியாகவே, இருத்தல் வேண்டுமென்றும் பாடசாலைகள் தரம்பிரிக்கப்படும் போது யாழ்ப்பாணத்திலுள்ள தகுதியான பாடசாலைகள் யாவும் ஜி. ஸி. ஈ. உயர்தரம் வரை இயங்கிவர அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், மாணவ ஆசிரியர் முறை ஒழிக்கப்பட்டு பழையபடி எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவர்களிடையே போட்டிப் பரீட்சையை நடத்துவதன் மூலம் தெரிவு செய்யப்படுபவர்களை ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சி நியமனம் வழங்குதல் வேண்டுமெனவும் அம் மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

மகஜரில் அடங்கியுள்ள மற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

''சிங்களப் பாடசாலைகளோடு சேர்ந்தியங்கும் தமிழ்ப் பாடசாலைகள் தனியாகப் பிரிக்கப்பட்டு தனிப்பட்ட ஒரு தமிழ் தலைமையாசிரியரின் கீழ் இயங்குதல் வேண்டும்.

''1960-க்குப் பின் ஆசிரியர்கள் நியமனம்நடைபெறுமல் இருந்து வருவதே தென்பகுதிப் பாடசாலைகள் மூடப்படுவதற்கும் கல்வித்தரம் குறைவதற்கும்காரணமாதலால் உடனடியாகப் புதிதாக ஆசிரியர்களை நியமனம்செய்தல் வேண்டும்.''

''தனியார் பாடசாலைகள் தொடர்ந்தும் இயங்கி வர வேண்டும்.''

''திட்டமற்றஇடமாற்றங்களினால் கல்வி நிலைபாதிக்கப்படுவதால் ஆசிரியர்களை இடமாற்றக்கூடாது.''

கோஷ்டியில் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா, வலி. கிழக்கு தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு. ஆ. க. மாணிக்கம், த. இராசரத்தினம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

# 'பாரதியின் பாடல்கள் இளைஞர்களின் வழிகாட்டி'

## பாரதி விழாவில் சைவப்புலவர் வல்லிபுரம்

உடுப்பிட்டி, புதன்

''இன்றைய இளைஞர்கள் அறியாமை காரணமாகத் தீய வழிகளில் சென்று கொண்டிருக்கின்றார்கள். இத்தருணத்தில் பாவலன் பாரதியின் பாடல்கள் இளைஞர்கட்கு நல்ல வழிகாட்டியாகவும், குருவாகவும் விளங்குகின்றன. வள்ளுவர் நீதி நூல்களைப்படைப்பதில் வல்லவராகத்திகழ்ந்தார். கம்பர் காவிய நாயகனாகத் தரணியில் விளங்கினார். ஆனால் பாரதியாரோ, சமூகத்தையே தன் கவிகளில் வடித்தெடுத்தார். பாரதி பாடல்கள் கருத்துச்செறிவும், அழியாக் கவித்துவமும் வாய்ந்தன. இவர் உலக மக்களின் நல்வாழ்விற்காக வேதங்களில் காணப்பட்ட தவறுகளைக் கண்டிக்கவும் தயங்கவில்லை. சமுதாயத்துக்கு நன்மையளிக்கக்கூடிய அத்தனை துறைகளையும் முக்கிய அம்சங்களையும் தனது கவிகளில் கையாண்டுள்ளார்.''

இவ்வாறு காணவாய் [illegible] ஆதவன் அரங்கில் நடைபெற்ற ஆதவன் இளைஞர் மன்றத்தினரின் பாரதி நினைவு விழாவில் பேசுகையில் சைவப்புலவர் திரு. சி. வல்லிபுரம் கூறினார். இவ் விழா ஆசிரியர் சபா. செல்வநாயகம்தலைமையில் நடைபெற்றது. மன்றத்தலைவர் திரு. க. இரத்தினசபாபதி வரவேற்புரை நிகழ்த்தினார்.

சைவப்புலவர் திரு. சி. வல்லிபுரம் தொடர்ந்து பேசுகையில், ''பண்டைக் காலப்புலவர்கள் இலக்கியச் சுவை பொருந்திய பல அருமையான தமிழ்ப்பாடல்களைப் படைத்துச்சென்றுள்ள போதிலும் அவர்கள்வேறு துறைகளிலேயே தமது கவனத்தைச் செலுத்தினர். சமூகத்திலே சாதிப்பாகுபாடுகள், உயர்வு தாழ்வுகள் காணப்படுவது தமிழனை மாசுபடுத்துவதாகும். பெண்களை அடிமைப்படுத்த எண்ணுதல் அறிவீனம். கவிஞன் பாரதிநவீன முறையில் புத்தம் புதிய உத்திகளைக் கையாண்டு தமிழினத்தின் சுபீட்சவாழ்விற்காக இயற்றிய கவிதைகள் பல நூற்றுண்டுகள்வரை

[5-ம் பக்கம் பார்க்க]

# ஐயாறன் எழுதுகிறார்

இம்முறை பாரதி விழாவுக்கு பாரதியாரின் பேத்தியாரான ஸ்ரீமதி விஜயபாரதி விஜயம் செய்ய முடிந்தது விசேஷமாகும். அவரைச் சுமார் இரண்டாண்டுகளுக்கு முன்பாக அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் கண்டேன். தம் பாட்டனாரின் கவிதை, கட்டுரைகளை ஆராய்ந்து 'பி. எச். டி.' என்ற கலாநிதிப் பட்டம் பெற இந்திய அரசாங்கத்தின் விசேஷ உதவியுடன் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதற்கிடையே தனது விசேஷ ஆராய்ச்சியை முடித்து கட்டுரையை சமர்ப்பித்துள்ளதாயும், விவாகமும் சென்ற ஆண்டில் நடந்ததாகவும் தெரிவித்தார். அவரது கணவரி சுந்தரராஜன் அவர்கள் கோவையிலே ஒரு கல்லூரியில் ஆங்கில உதவிப் பேராசிரியராவார்.

இவ்விருவரையும் கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் கலாசார விடுதியில் கண்டேன். பத்திரிகைக்காரர்களும் எழுத்தாளர்களும் அவர்களைச் சந்தித்து அளவளாவினர். பாரதியாரின் நூல் உரிமையைச் சென்னை அரசாங்கம் வாங்கி பொதுவுடைமையாக்கியுள்ளதாயும், ஆனால் பாரதியாரின் கவிதை, கட்டுரைகளடங்கிய பிழைகளில்லாத நல்ல பதிப்பு இதுவரை வெளிவரவில்லை என்றும், யாராவது அவ்வித பதிப்பை வெளியிட முன்வந்தால் அவர்களுடன் ஒத்துழைத்து உதவத் தாங்கள் தயாராக இருப்பதாயும் இந்த இலட்சிய தம்பதிகள் தெரிவித்தனர்.

பாரதியார் ஏழ்மையால் வாடியதுண்டா, என்று கேட்டதற்கு, பல சமயம் பணமின்றி இருப்பினும் அவர் அதற்காக வாடினாரென்று சொல்ல முடியாதென்றார், விஜயபாரதி. இதே கேள்வியை தமது பாட்டியாரான பாரதியாரின் மனைவியாரிடம் கேட்டால் அவருக்குக் கோபமும் வருமென்றார் அவர். பாரதியாருக்கு காசு பணம் பெரிதல்ல. தம் கையில் ஏதும் இருந்தால் உடனே அதை தேவைப்பட்டவருக்குக் கொடுத்துவிடுவார். பூரண தெய்வநம்பிக்கை கொண்ட பாரதியார், தெய்வம் தமக்குத் தேவையானதைத் தருமென்ற நம்பிக்கைகொண்டிருக்கவேண்டும்.

அவர் தமது கவிதைகளை எப்படி எழுதினார் என்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்டதற்கு, தமது ஆராய்ச்சிக் கட்டுரையில் அதைப்பற்றி விளக்கியிருப்பதாகத் தெரிவித்தார், விஜயபாரதி. தவறான வதந்திகள் பல கிளம்பியுள்ளதாயும், அவை உண்மையா என்று நிருபர் கேட்டதற்கு, தவறான வதந்திகளென்று கேள்வி கேட்டவரே கூறியபின் அதைப் பற்றி ஏன் பேச வேண்டுமென்று கூறி, அதை அத்துடன் முடித்துவிட்டனர், இந்த அழகுத் தம்பதிகள்.

என்ன லட்சியத்துடனே பாரதியார் தமது கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதினார்? ''என் பாட்டுத் திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திட வேண்டும்'' என்று பாரதியார் ''காணிநிலம் வேண்டும்'' என்ற புகழ் பெற்ற பாடலிலே பராசக்தியை வரம் கேட்டுள்ளதிலிருந்து அவரது நோக்கம் தெளிவாகிறது. மக்கள் படும் பல பல துயரங்களிலிருந்து அவர்களுக்கு விடுதலைதந்து அவர்களை உய்விக்கவேண்டுமென்பதே இம்மகாகவியின்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கிம் எல்லையில் மீண்டும் மோதல்

## சீனபீரங்கிகள்தொடர்ந்துமுழக்கம்

புதுடில்லி, செப். 13
இன்று காலை 2-30 மணிக்கு, சிக்கிம் எல்லையிலுள்ள நாதுலாம் பகுதியில், சீனத் துருப்புகளுக்கும் இந்தியத் துருப்புகளுக்குமிடையே மீண்டும் மோதல் ஏற்பட்டது. சீனப் பக்கத்திலிருந்து கனரக பீரங்கிகள் சுட்டன. சுமார் 12 மணி நேர ஓய்வுக்குப்பின், இந்தச் சூட்டுச்சம்பவம் நடந்துள்ளது. பின்னர், துப்பாக்கிப் பிரயோகம், குறைந்த அளவில், இடைவிடாது நடைபெற்றுக்கொண்டிருந்தது.

நாதுலாவில் இன்று காலை 5-30 மணியிலிருந்து சுடுவதை நிறுத்தலாமென்ற இந்திய யோசனைக்கு இதுவரை சீனவிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை.

## அமைதிக்காகப் பிரதேசத்தை விட்டுக்கொடுக்க முடியாது

### வாஷிங்டனில் தேசாய்

வாஷிங்டன், செப். 13
வாஷிங்டனில் தற்போது விஜயம் செய்யும் இந்தியத் துணைப் பிரதமர் திரு. தேசாய், சீனவுடனும், பாகிஸ்தானுடனும் இந்தியா அமைதியுடன் வாழவே விரும்புவதாகவும், ஆனால், இந்த அமைதியை, தனது பிரதேசத்தின் எந்த ஒரு பகுதியையும் விட்டுக்கொடுப்பதன் மூலம் அது பெற விரும்பவில்லையெனவும் கூறினர். தேசிய பத்திரிகைகள் சங்கத்தின் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. தேசாய் இவ்வாறு கூறினர்.

பொருளாதார வளர்ச்சிக்கு உலகின் எல்லா நாடுகளுடனும், முக்கியமாக அண்டை நாடுகளான சீன, பாகிஸ்தானுடன் நட்புறவுடன் வாழுவதே சாலச் சிறந்ததாகும் என்று கூறிய திரு. தேசாய், அதற்காக இந்தியா ஒருபோதும் தனது பிரதேசத்தை விட்டுக்கொடுக்க முடியாது என்ருர். பாகிஸ்தானுடன் நெருங்கிய பொருளாதார, அரசியல் தொடர்புகளை வைத்துக்கொள்ளவே இந்தியா விரும்புவதாக அவர் கூறினர்.

**பெரிய போராக மாருது**

சிக்கிம் எல்லையில் நடைபெறும் சீன-இந்திய மோதல் பற்றி அவர் குறிப்பிடுகையில், அது ஒரு பெரிய போராக மாறுமென்று தாம் எண்ணவில்லையெனினும், அப்படி ஒரு பெரிய போராக அது மாறினலும் இந்தியா தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் சக்தி கொண்டுள்ளதெனக் கூறினர்.

'சிக்கிம் எல்லை நன்கு வரையறுக்கப்பட்டுள்ளது. அதைச் சீனவும் ஒப்புக்கொண்டுள்ளது. இப்போது ஒப்புக்கொள்கிறதோ என்பதை நான் அறியேன். சீன எதை, எந்த நேரத்தில் செய்யும் என்பதை யாரும் கூறமுடியாது' என்ருர் திரு. தேசாய்

**அமெரிக்க பத்திரிகைகள்**

அமெரிக்கப்பத்திரிகைகள் இந்தியாவைப் பற்றிச் சரியான தோற்றத்தைக்கொடுக்கவில்லையென்றும், காரிருளும் சிரமமும் சூழ்ந்த இந்தியாவையே அவை பிரதிபலிப்பதாகவும் திரு. தேசாய் குறை கூறினர். இந்தப் பிழையான தோற்றத்தை அவை சரிசெய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இந்தியா சுதந்திரமடைந்து, கடந்த 20 ஆண்டுகளில் ஆற்றியுள்ள சாதனைகள் பற்றி திரு. தேசாய் விளக்கிக் கூறினர். ஜனநாயகக் கட்டுக்கோப்பினுள், இந்தியா எவ்வாறு தனது அரசியல், பொருளாதார வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகிறதென்பதை அமெரிக்கப் பத்திரிகைகள் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினர்.

திரு. தேசாய், நேற்று அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன்ஸனைச் சந்தித்தார். சந்திப்பு, தனிமையில் நடைபெற்றது. இன்று அமெரிக்க ராஜாங்க பாதுகாப்புமந்திரி திரு. மக்னமாராவை திரு. தேசாய் சந்திப்பார்.

## சீனத் தாக்குதல் ஒரு புதிய அபாயமல்ல

—இந்திரா காந்தி

புதியாறுவில், சிக்கிம் எல்லைப்போர்பற்றி, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி குறிப்பிடுகையில், அண்மைச் சூட்டுச்சம்பவம் புதிய அபாயம் ஒன்றுமில்லையெனவும், இந்த ஆபத்து எப்போதுமே இருந்து வந்ததேயாகுமென்றும் கூறினர்.

பத்திரிகையாளருடன் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர். சீன—இந்திய மோதல்பற்றி அவரை மேலும் விபரமாகப்பதிலளிக்கப் பத்திரிகையாளர் செய்த முயற்சி அவரிடம் பலிக்கவில்லை. அவர்வேறெதுவும் கூற மறுத்துவிட்டார்.

## பழைய ஜெருசலம்

### இஸ்ரேல் விடாது

நியூயோர்க், செப். 13
பழைய ஜெருசலத்தை இஸ்ரேல் ஒருபோதும் விட்டுக்கொடுக்காதென்றும், அதையிட்டுப் பேச்சுவார்த்தைகள் எதற்கும் இஸ்ரேல் இணங்காதென்றும், ஐ. நா. பொதுக்காரியதரிசி யூ தாண்ட் தமது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். இந்த அறிக்கை பொதுச்சபைக்கும், பந்தோபஸ்து சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

தமது விசேஷ பிரதிநிதியிடம் இஸ்ரேல் இவ்வாறு தெரிவித்துள்ளதாக யூ தாண்ட், இவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## காந்தியின் 100-வது பிறந்த தின விழா

மதுரை, செப். 13
ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும் மகாத்மா காந்தியின் கதர் திட்டத்தைப் பிரசாரம் செய்யவேண்டுமென்றும், தீபாவளி காலத்தில், ரூ.50 பெறுமதியான கதர்கூப்பன்கள் விற்கப்பட வேண்டுமென்றும் காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜ் இங்கு ஆலோசனை வெளியிட்டார்.

காந்தியின் நூருவது பிறந்த தினவிழாவை ஒக்டோபர் 2, 1969-ல் விரிவான முறையில் கொண்டாடுவதென்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முடிவைத் தொடர்ந்து, இப்போதிருந்தே காந்தியின் திட்டங்களைப் பிரச்சாரம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## மே. ஜெர்மனியுடன் தொடர்பு

பொன், செப். 13
ஜோர்தானும், லிபியாவும் மேற்கு ஜெர்மனியுடன மீண்டும் தொடர்பு வைத்துக்கொள்வதென முடிவு செய்துள்ளன. இரண்டு வருடங்களுக்குப்பிறகு, இவ்விரு நாடுகளும் மேறகு ஜெர்மனியுடன தொடர்பு வைத்துக்கொள்கின்றன.

## தூத்துக்குடி துறைமுகம்

சென்னை, செப். 13
தமிழகத்தில் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான வாய்ப்புத் தமக்கு விரைவில் கிடைக்குமென மத்திய போக்குவரத்து மந்திரி டாக்டர் கே. வி. ராவ், தமிழகப் பொதுப்பணி மந்திரி திரு. மு. கருணநிக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக முதல் மந்திரி திரு. அண்ணதுரையுடன் தூத்துக்குடித் துறைமுகம் பற்றிய விவரங்களைத்தாம் பேசிமுடித்த பிறகு, திட்டத்தைச் செயற்படுத்துவதில் எதுவித சிரமமுமிருக்காது எனத் தாம் நம்புவதாகவும் டாக்டர் ராவ் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## இந்தி திரைப்படங்களுக்கு தமிழக மாணவர் எதிர்ப்பு

### மதுரையில் ஒரு படம் திரையிடாது நிறுத்தப்பட்டது

சென்னை, செப். 13
ஒக்டோபர் 10-ந் திகதி தொடக்கம் இந்திப் படங்களைத் திரையிடுவதைநிறுத்துமாறு சென்னை நகரிலும், தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலுமுள்ள பல தியேட்டர் சொந்தக்காரர்களுக்குத் தமிழ்நாடு இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிசபை அறிக்கைகள் அனுப்பியுள்ளது. இத் தகவலை அச்சபையின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தியேட்டர் சொந்தக்காரர் அந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்க்கத் தவறினல், என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்பது பற்றி ஒக்டோபரில் கூடவிருக்கும் சபையின மாநாடு தீர்மானிக்கும் என்றும் அவர் கூறினர்.

ஒக்டோபர் 10ந் திகதியிலிருந்து தக்ஷிண பாரத இந்தி பிரச்சார சபையை மூடுமாறு கேட்டு இந்திய மத்திய அரசாங்கத்துக்கு எழுதுவதெனச் சபை முடிவு செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் இந்திப் பிரச்சாரசபை இயங்கி வருவதால், அவ்விஷயம் மத்திய அரசின் அதிகாரத்துக்குட்பட்டதாகுமென அவர்குறிப்பிட்டார்.

**இந்தி எழுத்து அழிப்பு இயக்கம்**

ஒக்டோபரில் நடைபெறவிருக்கும் மாநாட்டைத் தொடர்ந்து, தபாற்கந்தோர், ரயில் நிலையங்களின் பெயர்ப்பலகைகளிலிருந்து இந்தி எழுத்துக்களை அழித்துவிடும் தமது நோக்கத்தையும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி சபை, இன்னும் இரண்டொரு நாட்களில் மத்திய அரசாங்கத்துக்கு அறிவிக்குமென்றும் அப் பிரதிநிதி கூறினர்.

**இந்திப்படம் நிறுத்தப்பட்டது**

இதற்கிடையில், மதுரை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், கடந்த வெள்ளியன்று, இந்திப் படமொன்றைத் திரையிடவிடாது உள்ளூர்த்தியேட்டரொன்றை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தினர்.

சிவசேனையின் நடவடிக்கைகளைக் கண்டிக்கும் முகமாக ஓர் ஊர்வலத்தில் சென்ற இம் மாணவர்கள், 'மொரார்ஜி வீழ்க' என்றும் இந்தி எதிர்ப்புக் கோஷங்களையும் கிளப்பினர்.

தியேட்டரை அடைந்ததும், குறிப்பிட்ட அந்த இந்திப்படத்தை மாலையில் அத் தியேட்டரில் காண்பிக்கப்படாதென்றும், காண்பித்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென்றும் தியேட்டர் மனேஜரை அவர்கள் பயமுறுத்தினர். இதைத் தொடர்ந்து, இந்திப்படம் திரையிடப்படவில்லை. அதற்குப்பதிலாக ஒரு தமிழ்ப்படம் திரையிடப்பட்டது.

## உ. பிரதேச வெள்ளத்தில் உயிரிழந்தவர் 112 பேர்

### பல்லாயிரக்கணக்கான வீடுகளும் பயிர் நிலமும் நாசம்

புதுடில்லி, செப். 13
உத்தரப் பிரதேசத்தில் வெள்ளத்தினல் இறந்தவர்கள் தொகை 112 எனக் கணிக்கப்பட்டுள்ளது. 74,000 வீடுகள் நாசமாக்கப்பட்டுள்ளன.

அங்கு, கங்கா ஆறு, அபாய நீர்மட்டத்தைவிட 4 அடி உயர்ந்துள்ளது. 1948-ம் ஆண்டைய அபாய நீர்மட்டத்தையும் இது தாண்டிவிட்டதெனக் கூறப்படுகிறது.

**பீஹாரில்**

பீஹாரில், கங்கை ஆற்றினல் ஏற்பட்ட வெள்ளத்தினல் 15 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தானியங்களுக்கு ஏற்பட்

[4-ம் பக்கம் பார்க்க]

## ஐரோப்பிய பிரச்னைகளைத்தீர்க்க பிரான்ஸ்-போலந்து ஒத்துழைப்பு

### டி கோலின் விஜய முடிவில் கூட்டறிக்கை

வார்சோ, செப். 13
ஐரோப்பாவின் முக்கிய பிரச்னைகளைத் தீர்க்கும் முயற்சியில் ஒத்துழைப்பதென்று பிரான்சும், போலாந்தும் ஒத்துக்கொண்டுள்ளன. தமது உதாரணத்தை மற்றைய ஐரோப்பியநாடுகளும் பின்பற்ற வேண்டுமென இரு நாடுகளும் கேட்டுக் கொண்டுள்ளன.

ஜெர்மனி பிரச்னை உட்பட மற்றைய பிரச்னைகளும், தீர்ப்பதற்கு அதிக இலகுவாகிக்கொண்டு வருவதாக இரு நாடுகளும் நம்பிக்கை [illegible] டி கோலின் போலாந்து விஜயத்தின் முடிவில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையொன்றிலேயே போலாந்தும் பிரான்சும் இவ்வாறு தெரிவித்துள்ளன.

**வியட்னும் போர்**

வியட்னுமில் நடைபெறும் போரே உலக நெருக்கடிக்கு முக்கிய காரணமாக இருப்பதாகவும், அங்கு அந்நிய நாடுகளின் தலையீடு ஒழிக்கப்பட வேண்டுமென்றும் அக்கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரான்சுக்கு விஜயம் செய்யுமாறு டி கோல் விடுத்துள்ள அழைப்பைப் போலாந்துத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. அவர்கள் அடுத்த ஆண்டில் பிரான்சுக்கு விஜயம் செய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நிலைகளை விட்டுக் கொடுக்கவில்லை**

பிரெஞ்சு ஜனதிபதி டி கோலின் விஜயம், போலாந்து மக்களிடம் பெரிய ஆதரவைப் பெற்றுள்ளதாக விளங்கிய போதும், பிரான்சும், போலாந்தும் தத்தம் அடிப்படைக் கொள்கை நிலைகளிலிருந்து விட்டுக்கொடுத்துள்ளதாகத் தெரியவில்லை.

ஆனல் டி கோலின் விஜயத்தில் ஒரு அம்சம் மட்டும் தனித்து நிற்கிறது. அதுதான் போலாந்து மக்களுக்குத்தமது உரையை நேரில் ஒலிபரப்ப டி கோலுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதே.

## பெட்ரோமாக்ஸ் வெடித்து 3

### சிறுமிகள் மரணம்

ஷிமோகா, செப். 13
ஷிமோகாவிலிருந்து 35 மைல் தூரத்திலுள்ள ஹொனு அருகே ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கு வெடித்ததன் விளைவாக 3 சிறுமிகள் மாண்டனர். இறந்த சிறுமிகள் அனைவரும் [illegible] முதல் 10 வயதுவரை உள்ளவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ்ப் பகுதிகளில் விவசாயப்படை நிறுவுக"

யாழ்ப்பாணம், வியா.

அரசாங்கத்தால் நிறுவப்படும் விவசாயப்படைக்குப் பல தமிழ் வாலிபர்கள் விண்ணப்பித்திருந்தும். இந்த முகாமை நிறுவ தமிழ்ப் பகுதிகளில் பல இடங்களிலிருந்தும்கூட ஒருவிவசாயப்படை முகாமாவது தமிழ்ப் பகுதிகளில் நிறுவாததைக் கண்டிப்பதுடன், உடனடியாக தமிழ் வாலிபர்களைக் கொண்ட ஒரு முகாமை தமிழ்ப்பகுதிகளில் நிறுவுமாறுஅரசாங்கத்தைக்கோருவதென்ற தீர்மானம் தமிழரசு வாலிப முன்னணியின் செயற்குழுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

முன்னணி உபதலைவர் திரு. சே. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் பின்வருமாறு:—

''யாழ்ப்பாணத்தில் உபவானொலி நிலையம் அமைக்க எடுத்த முயற்சிகள்ஓராண்டு முடிந்தும் நடைமுறைக்கு இன்னமும் வராதது இப்பகுதிக்கலைஞர்களையும், தமிழ் மக்களையும் புறக்கணிப்பதாகவிருப்பதோடு, இலங்கை வானொலி கூட்டுஸ்தாபனசபையிலும் ஒருதமிழர்கூட இல்லாதது தமிழினத்தையே அவமதிப்பதாகவிருப்பதால் இதுபற்றிஉடன்நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வது.

''யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருக்கும் அரசாங்க விற்பனை நிலையத்துக்கு 'லக்சல' என்ற பெயரிடவேண்டாமென்றும், 'உள்நாட்டு உற்பத்திப்பொருட்கள் விற்பனவு நிலையம்' எனப் பெயரிடுமாறும் அரசாங்க அதிபரை வலியுறுத்துவது.'

கோடீஸ்வரன் வழக்கு, தீவுப்பகுதி நிரந்தரக் குடிநீர்ப்பிரச்னை, தமிழரசுக்கட்சித் தொகுதிகள் பற்றிய பிரச்னைகள்பற்றியும் சுமார் 4 மணிநேரம் இங்கு ஆராயப்பட்டது. [ந. நி]

## சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். ஜெயபாலன் எஸ். லெட்சுமி காந்தன் ஆகிய இருவரும் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். பால சுப்பிரமணியம் வி. வைத்தீஸ்வரன், எஸ். நேசராசா ஆகிய மூவருக்கும் இவ்வருடம் சித்திரை மாதம் 25-ந் திகதி பருத்தித்துறை சந்தையில் வைத்து கைக்குண்டு வீசியதாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் இவ்வழக்கை சுப்ரீம் கோர்ட்டிற்குப் பாரப்படுத்தியுள்ளார்.

## கரணவாயும் இனி ஒன்று

உடுப்பிட்டி, புதன்

இவ்வருடம் டிசம்பர் மாதம்முதல் ஜி. சி. ஈ. [சாதாரணம்] பரீட்சைக்கான பரீட்சை நிலையங்களுள் கரணவாய் கிராமமும் ஒரு பரீட்சை நிலையமாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பலவருடகாலமாகக் கரணவாய் பகுதியைச் சேர்ந்த மாணவர்களும், மாணவிகளும் கரவெட்டி, நெல்லியடி, உடுப்பிட்டி ஆகிய பரீட்சை நிலையங்களுக்குச் சென்று பரீட்சை எழுதி வந்தனர்.

# "அதிக உணவு பயிரிடுதல் தேசாபிமானமாகும்"

புன்னாலைக்கட்டுவன், புதன்

''இன்றையநிலையில் அதிக உணவு பயிரிடுதலையேதேசாபிமானமெனக் கருதவேண்டும். இனியாவது அரசாங்க உத்தியோகங்களை எதிர்பாராது எமது இளைஞர் கமத்தொழிலில்ஈடுபட்டால் அவர்களுடைய எதிர்காலமும், நாட்டின் சுபிட்சமும் விருத்தியடையும். இது இதுபோன்ற இயக்கங்கள் ஒருசில இடங்களிலன்றி, பரவலாக நாடு முழுவதும் ஆரம்பிக்கப்படவேண்டும்''.

இவ்வாறு வடபகுதி மேலதிகஅரசாங்கஅதிபர்திருஜே, எம், சபாரத்தினம் நேற்று முன்தினம், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி விவசாயப்பகுதியினர் கல்லூரிக்குச்சொந்மான 12 பரப்பு நெற்காணியில் பரீட்சார்த்தமாக யப்பானிய வரிநெல் விதைப்பு முறையை ஆரம்பித்துவைத்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் விவசாயப்பகுதி உத்தியோகத்தர்கள், கிராமக்கமச்செய்கைக் குழுவினர். ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கமிஷனொன்று நியமிக்க வேண்டும்

உடுப்பிட்டி, புதன்

''வாக்கு வித்தியாசமின்றி வட்டாரங்களைப் பிரிக்க வேண்டுமென்றும், வட்டாரங்களைப் பிரிப்பதற்குக் கமிஷனொன்று வேண்டுமென்றும்'' கோரும் தீர்மானமொன்றை உடுப்பிட்டிக் கிராமசபையின் அடுத்த கூட்டத்தில் விவாதிப்பதற்கு 14-ம் வட்டார அங்கத்தவர் திரு. பி. கணேசமூன் னறிவித்தல் கொடுத்துள்ளார். [த. நி.]

## வட்டுக்கோட்டை நாகேந்திர மடம்

# 'உப தபால்நிலைய அலுவல்களை தமிழில் நடாத்துக' — எம். பி. தந்தி

யாழ்ப்பாணம், வியா.

வட்டுக்கோட்டை நாகேந்திரமடம் உப-தபால் நிலையத்தில் தமிழில் அலுவல்கள் நடாத்தக்கூடாதென்றும் சிங்களம் அல்லது ஆங்கிலத்திலேயே அலுவல்கள் நடாத்த வேண்டுமென்றும் இம்மாதம் 5-ந் திகதி வடபகுதி தபால் கண்காணிப்பாளர் பணித்துள்ளதை உடனடியாக ரத்துச் செய்யும்படிசோரி கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் பிரதம தபால் அதிபர் திரு. ஏ. எல். பெரேராவிற்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளார்.

இதுசம்பந்தமாக அகில இலங்கை தமிழ்பேசும் உப-தபாலதிபாகள் தொழிற்சங்கம் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினருக்குமுறையிட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்மொழி (விசேஷ ஏற்பாடுகள்) 1966-ம் ஆண்டு பிரமாணங்களின் படியும் திறைசேரி சுற்றறிக்கை 686-ன் படியும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அலுவல்கள் அனைத்தும் தமிழில் நடைபெற வேண்டுமென்றும், எனவே வடபகுதி தபால் கண்காணிப்பாளர் பணிப்பை நீக்கி நாகேந்திரமடம் உப-தபால் நிலையத்தில் தமிழிலும் அலுவல்களைச்செய்ய உடனே கட்டளையிடுமாறும் மேலும் தந்தியில் திரு. இரத்தினம் கோரியுள்ளார்.

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு சென்ற தமிழர் ஒருவருக்கு சிங்களக் கடிதம் வழங்கப்பட்டதாகவும், கிழக்கு மாகாணகல்விபணியாளருக்கு தாம் தமிழிலனுப்பிய தந்தியொன்றிற்கு ஆங்கிலத்தில்மட்டும் பதில் அனுப்பப்பட்டதாகவும், கிளிநொச்சியிலுள்ள பெனடிக்ற் திரேசம்மா என்ற பெண்ணிற்கு புகையிரத தலைமை நிலையத்திலிருந்து தனிச்சிங்களத்தில் கடிதம் கிடைத்தது தனக்குக் காட்டப்பட்டதாகவும் நமது நிருபர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் திரு. இரத்தினம் தெரிவித்தார்.

தமிழ்மொழிச் சட்டவிதிகள் ஒரு கண்துடைப்பு என மக்கள் கருதுவதாக இவர் மேலும் குறிப்பிட்டார்.

## வடபகுதிக்கு 20 புதிய பொலிஸார்

யாழ்ப்பாணம், வியா.

வடபகுதியில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு புதிதாக 20 பொலிசார் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் எல்லோரும் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டு கொழும்பு பொலிஸ் பயிற்சி நிலையத்திலிருந்து 3 மாத கால பயிற்சியின் பின்னர் இங்கு வந்துள்ளனர்.

வழமையாக புதிதாக நியமிக்கப்படும் பொலிஸ்காரருக்கு 6 மாத கால பயிற்சி அளிக்கப்பட்டதென்றும் பொலிசார் பற்றாக்குறை காரணமாகவே பயிற்சி நிலயத்தில் இருந்து 3 மாத கால பயிற்சியுடன் அனுப்பப்பட்டார்கள் எனவும் தெரிய வருகிறது.

இப்புதியபொலிஸ்கான்ஸ்டேபிள்கள் யாழ்ப்பாணத்தில் மேலும் 3 மாத காலங்கள் பயிற்சியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் இதன் பொறுப்பை இன்ஸ்பெக்டர் திரு. எ ஆர். சகாயம் ஏற்றுள்ளாரென்றும் அடுடப்படுகிறது. [வி. நி]

## பள்ளிகளில் குடிநீர் இல்லை

புன்னாலைக்கட்டுவன், புதன்

இப்பகுதியிலுள்ள சில பாடசாலைகளில் பாடசாலை மாணவர் குடிநீர் வசதியின்றித் தவிக்கிறார்கள். இதன் விளைவாகச் சில பிள்ளைகள் அயல் வீடுகளுக்கும் கடைகளுக்கும் போகவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதுவிடயமாகப் பெற்றாரிடையே அதிருப்தி நிலவுகிறது.

## களவு சைக்கிளுடன் இளைஞன் கைது

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை பொலிஸ் கான்ஸ்டபிள்களான கருணாரத்ன, ஹட்சு ஆகிய இருவரும் ரோந்து சுற்றிக்கொண்டு வருகையில் பொலிகண்டியைச் சேர்ந்த நடராசா மகேந்திரராசா என்ற இளைஞன் களவு போன சைக்கிள் உறுப்புக்களைக் கழற்றிக் கொண்டிருக்கையில் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். மாஜிஸ்திரேட் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## பூரணவிபரம் திரட்டப்படும்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வியாபாரஸ்தாபனங்கள் பற்றிய பூரணவிபரங்களைச் சேகரிக்கும் பொறுப்பைக் கிராமசேவையாளர்களிடம் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா ஒப்படைத்துள்ளார். இதற்கான வேலைகள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளன.

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள 12 கிராமசேவையாளர் பிரிவிலும் இந்தக் கணக்கெடுப்பு அடுத்தமாதம் 15ந் திகதிவரை நடைபெறும். தனிப்பட்ட வர்த்தக நிலையங்கள், உத்தரவுபெற்ற கூட்டுஸ்தாபனங்களின் கிளைகள், தேநீர்க்கடைகள் உட்படச் சகல வர்த்தக ஸ்தாபனங்களின் பெயர்கள் விலாசம், உரிமையாளர் பெயர், வரித்தொகை, மாதாந்த விற்பனைத் தொகை, கடமையாற்றும் ஊழியர்கள் தொகை. இறக்குமதித் தொகை பற்றிய முழுவிபரங்களும் இவர்களால் சேகரிக்கப் படுமென அடிவிக்கப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்புச் சரியானமுறையில் நடைபெற சகல வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களையும், கிராம சேவையாளருடன் ஒத்துழைக்குமாறு அரசாங்க அதிபர் வேண்டியுள்ளார்.

## உ. பிரதேச...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ள சேதம் 20 கோடி ரூபாயென மதிக்கப்பட்டுள்ளது. நிவாரண வேலைகளுக்கென மேலும் 10 லட்சம் ரூபாயை பீஹார் அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

### ஒரிஸ்ஸாவில்

ஒரிஸ்ஸாவில், 260 கிராமங்களில் சுமார் 50 லட்சம் ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது. 68,000 வீடுகள் தகர்ந்துள்ளன.

### அலஹாபாத்

அலஹாபாத்தில், வெள்ளம் இப்போது தணிய ஆரம்பித்துவிட்டதாகச் செய்தி [illegible]

## புளியம்பொக்கணை

# கொலைமுயற்சி வழக்கில் எதிரிக்கு 3 வருட நன்னடத்தை

யாழ்ப்பாணம், வியா.

புளியம்பொக்கணை கொலை முயற்சி வழக்கில் எதிரியை 3 வருட நன்நடத்தைப் பிணையில் விட்டு, 500 ரூபா பிணையில் செல்ல நீதியரசர் அனுமதித்தார்.

இவ்வழக்கு நேற்று முன்தினம் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது

இவ்வழக்கில் 65-ம்ஆண்டு டிசம்பர் 6-ம் திகதி புளியம்பொக்கணையில், சொச்சைப்பை கிருஷ்ணன் என்பவர், தம்பையா சண்முகம் என்பவரை கொலைசெய்ய முயற்சித்ததாகவும், செங்கோல் முத்துவுக்கு காயம் ஏற்படுத்தியதாகவும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் எம். ஆலாலசுந்தரம் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் அலோய் இரத்னாயக்கா ஆஜரானார்

எதிரி கைமோசக் கொலை முயற்சி குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

## 'ஏனிந்தப் பாரபட்சம்' எம். பி. கேட்பார்

புன்னாலைக்கட்டுவன், புதன்

சிங்களம் தெரியாதென்ற காரணத்தினால் யாழ். கல்விக் காரியாலயத்தைச் சேர்ந்த மூன்று எழுதுவினைஞருக்குச் சேவை நீடிப்பு மறுத்துள்ள கல்வித்திணைக்களம், ஒருவருக்கு மட்டும், 57 வயதுக்குப்பின் சிங்களம் தெரியாத போதிலும் சேவை நீடிப்பு அங்கீகாரம் அளித்துள்ளது. இந்நால்வரும் பாடசாலை வரவுத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்த காலத்தில் பொது எழுதுவினைஞர் சேவையில் பத்து ஆண்டுகளுக்கு முன் நியமிக்கப்பட்டவர்கள். ஒரே தகைமையும் ஒரே வகையான வேலையும் செய்துவந்த இவர்களுக்குள் இப்பாரபட்சம் காட்டப்பட்டது பற்றித் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கல்வி அமைச்சரைப் பாராளுமன்றதில் கேட்கவிருப்பதாகத் தெரிகிறது.

## வடமாகாணம் புறக்கணிப்பு?

கொட்டாஞ்சேனை, புதன்

நாட்டின் பல பாகத்திலும் கல்விப் பகுதியினால் அமைக்கப்பட இருக்கும் விஞ்ஞான கூடம் அநேகமாக வடமாகாணத்தில் அமைக்கப்படமாட்டாது என்று தெரிய வருகின்றது. இதனை முன்னிட்டு தமிழ் மக்கள் மிகவும் கவலையடைந்துள்ளதாகவும் இது பற்றி தமிழரசுக்கட்சி கல்வி மந்திரியிடம் கேட்க விருப்பதாகவும் அறியப்படுகிறது.

## 'பஸ்களை உடன் அனுப்புக'

யாழ்ப்பாணம், வியா.

'கிளிநொச்சி பஸ் நிலையத்தில் தற்போது பத்து பஸ்கள்தான் இருக்கின்றன. அதிலும்நான்குபஸ்கள் சேவைக்குத் தகுதியற்றவையாகவுள்ளன. ஆனால் தாங்கள் எழுதியுள்ள கடிதத்தில் பன்னிரண்டு பஸ்கள் இருப்பதாகக் குறிப்பிட்டிருப்பது தவறாகும். ஆகையால் ஆறு பஸ்களையும் உடன் அனுப்பி வைக்குமாறு கோருகிறேன்' என்று தேசிய சேவை மந்திரிக்கு கிளிநொச்சி எம். பி. பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அனுப்பிவைத்துள்ள தந்தியொன்றில் கேட்டுக்கொண்டுள்ளார். [நி.]

## ஜம்மு - காஷ்மீரில் நெருக்கடி

ஸ்ரீநகர், செப். 13

ஜம்மு-காஷ்மீர் பிரதமர் திரு. ஜி. எம். சாதிக், தமது மந்திரிசபையைப் புனரமைப்புச் செய்யவிருக்கிறார். அவர் சில கனிஷ்ட மந்திரிகளை விலக்குவதென முடிவு செய்துள்ளார். இம்மந்திரிகளை தாம் முன்னதாக மக்களின் விருப்பத்துக்கு மாறாகவே எடுத்துக்கொண்டதாக அவர் பிரதேச காங்கிரஸ் செயற்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் பள்ளத்தாக்கில் குறிப்பிடத்தக்க செல்வாக்குப் படைத்தவரான பிரதேச காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு. திரிலோச்சன் டட், ராஜினாமாச் செய்துள்ளார். கொள்கையிலான அபிப்பிராயபேதமே, அவரது ராஜினாமாவுக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

இன்னும் சில ராஜினாமாக்கள் தொடரும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், நிதி மந்திரி திரு. டி. பி. தார் ராஜினாமாச் செய்துவிட்டார் என்ற செய்திகள் இங்கு ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

**விற்பனைக்கு**
மலிவு விலையில்
கட்டிடக்காணி
துண்டுகள் விற்பனைக்கு
இருக்கின்றன

யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோவிலுக்குச் சமீபத்தில், பஸ் போக்குவரத்துப் பிரதான வீதிகள் இரண்டின் மத்தியிலுள்ள அம்மன் வீதியில் கட்டிடக் காணித் துண்டுகள் சில உடனடியாக விற்பனைக்கு உண்டு. தவணைமுறையில் பணம் கட்டுவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

விபரங்களுக்கு
H. P. T.,
61, கெய்ஸர் வீதி,
கொழும்பு.
அல்லது
த. வடிவநாதன்,
'பூக்கன்ஸ்'
71, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.

247


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியா. 14-9-67**

[செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக் குறிப்பு, 7-30 குரலவகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 தமிழ்மோடிசை பாடல், 6-30 பேச்சு, 6-45 கிராமசஞ்சிகை 7-15 நாதஸ்வரவாத்தியக்கச்சேரி 7-45 நாடகம்-சபதம் [3] பாலாம்பிகை நடராசா 8-00 முஸ்லீம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி.


**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
காந்தராவ் — வசந்தி
நடித்த
**வீரபாண்டியன்**

**REGAL JAFFNA**
Time: 4-30 7-00 p. m.
9-45 p. m.
Peter Falk & Britt Ekland
in
Too Many Thieves

**நியூ காலிங்கனா**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர் — விஜயா
நடித்த
**பஞ்சவர்ணக்கிளி**

**2-வது வெற்றி வாரம்!**
கெபிடல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
விஜிதா [ஹட்டன்] மொடர்ன் [பதுளை] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
புதுமையான கதை! உணர்ச்சிமிக்க வசனம்!
காதிற்கினிய பாடல்கள்!
முழுவதும் ஒரு ஹாஸ்ய விருந்து!
**ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், நாகேஷ்,**
**விஜயலட்சுமி, ரத்னு, மாதவி**
நடித்த



**நாம் மூவர்**
டைரக்ஷன்: ஜம்பு பாடல்கள்: வாலி இசை: என்.எம்.எஸ்.

**3-வது மாதம்** இங்ஸ்லி [கொழும்பு]
மற்றும் 5 திரைகளில்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
**அன்பே வா**


## இன்று கரவெட்டியில் உள்ளூராட்சி அமைச்சர்

உடுப்பிட்டி, புதன்

நாளை உள்ளூராட்சி அமைச்சர் கரவெட்டிக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவிருக்கிறார்.

கரவெட்டி மேற்கு அத்துளு குளத்திட்டத்தில் சுமார் 2 1/2 லட்சம் ரூபா செலவில் உருவாகவிருக்கும் குழாய் நீர்விநியோக, நீர்ப்பாசனத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அடிக்கல்லை உள்ளூராட்சிஅமைச்சர் திரு. எம். திருச்செல்வம் நாளை வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு நாட்டுவார். நெல்லியடிப் பட்டினசபையின் பரிபாலனத்தில் இருக்கும் இவ் அத்துளுகுளம் ஓர் வற்றாத நீரூற்றைத் தன்னகத்தே கொண்டது.

## ஆங்கிலமே இணைப்பு மொழியாக நீடிக்கும்

**காமராஜ் உறுதி**

மதுரை, செப். 13

ஆங்கிலமே தொடர்ந்து இந்தியாவின் இணைப்பு மொழியாக நீடிக்குமென காங்கிரஸ் அக்கிராசனர் திரு. காமராஜ், இங்கு அவரைச் சந்தித்த தமிழ்நாட்டு மாணவர் குழுவொன்றுக்கு உறுதியளித்தார்.

திரு. காமராஜரைச் சந்தித்த மாணவர் பிரதிநிதிகளிடம், மொழிப்பிரச்னை பற்றி துணைப்பிரதமர் திரு. தேசாய் வெளியிட்ட கருத்தையிட்டுக் குழப்பமடைய வேண்டாமென்று புத்திமதி கூறினர். திரு. தேசாய் தமது சொந்தக் கருத்தையேவெளியிட்டிருந்தாரன்றி, அது அரசாங்கத்தின் முடிவாகாது.

**மசோதாவரும்**

இந்தியை இந்தி அல்லாத சாஜ்யங்கள் விரும்பும்வரை, ஆங்கிலமே நாட்டின் இணைப்பு மொழியாக நீடிக்கும் என்ற காலஞ்சென்ற பிரதமர் ஜவஹர்லால் நேருவின் உறுதிமொழியை அடக்கிய மசோதா ஒன்று, பார்லிமெண்டின் அடுத்த தொடரில் சமர்ப்பிக்கப் படுமென்றும் திரு. காமராஜ் மாணவர்களிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

## பாரதியின்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

நிலைத்திருக்கும்." என்றுகூறினர்.

பண்டிதர் திரு. இ. க. முருகேசு பேசுகையில், "பாரதியார் புகழ்பெற்ற கவிஞராக விளங்கியபோதிலும் அகம்பாவம்கொள்ளவில்லை. ஆனால் எவருக்கும் அடிபணியவும், தலைவணங்கவும் இணங்கவில்லை. தனது தூய வாழ்க்கையிலே இனிமையையும் இன்பத்தையும்கண்டார்" என்று சொன்னர். சைவப்புலவர் திரு. ஐ. விநாயகமூர்த்திபேசுகையில், பாரதி உலகுக்குக் கூறவேண்டிய அத்தனை புத்திமதிகளையும் தனதுபாட்டுக்கள்மூலம்கூறிச்சென்றுள்ளபடியினுல் இன்றைய கவிஞர்கள் பாரதியின் கருத்துக்களை ஆதாரமாகக்கொண்டே பாடல்களை இயற்றிவருகின்றனர்" என்றூர்.

கரவெட்டி வள்ளுவர் கலைமன்றத் தலைவர் சைவப் புலவர் திரு. செ. அருளானந்தம் உட்பட வேறு சிலரும் பேசினர். சைவப் புலவர் கருணையூர் யோகன் வி அரங்கில் தனது கவிதைகளைப் படித்தார். செல்வநாயகத்தின் பரதநாட்டியமும், கண்ணன் நடனமும் இடம்பெற்றன.


**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
Daily 4.45, 7.00, 9.45.
Zorros Fighting Legion
(Serial)


# "ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ள முயலுங்கள்"

## வலிகாமம் மேற்கு விளையாட்டுப்போட்டி விழாவில் அரசாங்க அதிபர் வேர்ணன்

சுழிபுரம், புதன்

"ஒன்றுபட்ட உணர்ச்சியையும், வெற்றி தோல்வி இரண்டையும் சமமாக ஏற்றுக்கொள்ளும் மனத்திடம் உடையவனே உண்மையான விளையாட்டு வீரனுவன். பல பல இயக்கங்கள் ஒன்றுசேர்வதன்மூலம் ஒற்றுமையும், பரந்த அடிப்படையில் தமது திறமையைக் காட்டிக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படுகின்றன."

இவ்வாறு வலிகாமம் மேற்கு இரண்டாம் பிரிவு விளையாட்டுக் கழகங்களின் முதலாவது ஆண்டு விளையாட்டுவிழா பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் வட்டுக்கோட்டைப் எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுவிழாவுக்கு சங்கதலைவர் திரு. சி. கந்தையா தலைமைவகித்தார்.

பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா பேசுகையில், உணர்ச்சிமிக்க விளையாட்டுவிழா ஒன்றில் கலந்துகொண்டேன் என பெருமையடையும் வேளையில், விளையாட்டு வீரர்களுக்கு ஒரு வேண்டுதலையும் விடுகின்றேன். நீங்கள்விளையாடும்விளையாட்டுகள்மூலம் உமது நாட்டுக்கு நல்லபெயரைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இப்போட்டிகளுடன் உங்கள் திறமையை மட்டுப்படுத்தாது அகில உலக ஒலிம்பிக் போட்டிக்கு செல்லும் வாய்ப்பை உருவாக்கவேண்டும். நல்ல பயிற்சியின்மூலமே வெற்றியடையலாம். ஆதலால் கடினஉழைப்பும் ஆர்வமும் உள்ளவர்களாக விளங்க வேண்டும்" என்றூர்.

திருமதி வேணன் அபயசேகரா பரிசில்களை வழங்கினர். விளையாட்டு போதனுசிரியர் திரு. கா. அரிச்சந்திரா நன்றியுரை கூறினர்.

# "ஒரு சாராரை ஒதுக்குவது பெரும் பாவமாகும்"

யாழ்ப்பாணம், வியா.

"வேள்வி, பலி முதலிய பாவ காரியங்களைச் செய்பவர்களை ஆலயங்களுக்குள் அனுமதிக்கும் அதே வேளையில் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் என அழைக்கப்படும் ஒரு பகுதியினரைமாத்திரம் நாம் ஏன் ஆலயங்களுக்குள் செல்லவிடக்கூடாது? இதுவே நாம் செய்யும் பெரும் பாவமாகும்" என திருநெல்வேலி பாரதிபுலம் ஜனசமூக நிலைய மூன்ரும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய இந்துமாமன்ற நல்லூர்க் கிளைத்தலைவரும், அரியாலைப் பகுதிக் கிராமசேவையாளருமான திரு. தா. சிவபாதசுந்தரம் குறிப்பிட்டார்.

யாழ. மாவட்ட உடற்பயிற்சிப் போதனுசிரியர் திரு. என். தேவபாலசுந்தரம் இப்போட்டியை நடத்தினர்.

திரு. தா. சிவபாதசுந்தரம் மேலும் பேசியதாவது:- தமிழ் எம். பி.க்களுடனும் காரியாதிகாரிகளுடனும், கோயில் முகாமையாளர்கள் சேர்ந்து ஆலயப்பிரவேசத்தைச் சுமுகமானமுறையில் நடத்த முன்வரவேண்டும். அதே வேளையில் எமது சமயத்தின் தத்துவத்தைப் பற்றியும், அனுட்டானங்களைப் பற்றியும் நாம் விளங்கிக் கொள்வது அவசியமாகும். நமது குழந்தைகளுக்கும் சமய வாழ்வைப் பயிற்றுவிக்கவேண்டும்."

திரு. என். மார்க்கண்டு, திரு. ஏ. கனகு ஆகியோரும் பேசினர்கள். [ந. நி.]

## யாழ். கனிஷ்ட தொழில் கல்லூரி

காங்கேசன்துறை, புதன்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரி 67-ம், 68-ம் ஆண்டுக்கான வகுப்புகள் அக்டோபர் மாதம் 4-ந்திகதி ஆரம்பமாகிறது.

இவ்வாண்டுக்கான பரீட்சை முடிவுகள் வெகுவிரைவில் அறிவிக்கப் படுமென எதிர்பார்க்கப் படுகிறது. இவ்வாண்டுக்கான பரீட்சைகளை இம்முறை கல்வி இலாகாவே பொறுப்பேற்று நடாத்தி வருகின்றது.

## மரநிழலில் நோயாளிகள்

நாரந்தனை, புதன்

வேலணை அரசினர் டிஸ்பென்சரியில் இடவசதியின்மையால் பொதுமக்கள்பெரிதும் கஷ்டமுறவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மருந்துபெற வரும் வெளிநோயாளர்கள் தங்கி நிற்பதற்குப் போதிய இடவசதியின்மையால்வெளியே மரங்களின் கீழும், வேறு கடைகளின் முன்னும் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவசர சிகிச்சை செய்வதற்கு வேண்டிய பொருட்களோ அறையோ கிடையாததால் இங்கு வரும் நோயாளிகள் மிகவும் அதிருப்தி கொண்டுள்ளார்கள்.

இதுபற்றி டிஸ்பென்ஸரியைச் சேர்ந்த அப்போதிக்கரி மேலதிகாரிகளுக்குப்பல முறை புகார் செய்தும் இது வரை எதுவித பலனும் கிடைக்கவில்லையாம்,

## கி. சேவையாளருக்கு முற்பணம்

யாழ்ப்பாணம், வியாழன்

கிராமசேவையினர்களும் சைக்கிள் வாங்க முற்பணமாக 300 ரூபா வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது இப் பணம் அவர்களது மாதாந்தச் சம்பளத்திலிருந்து 30 தவணைகளில் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ந. நி]

## ஏ. வி. விசுவநாதன் புதிய செயலாளர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண பிரதேசகலாமன்றச் செயலாளரான யாழ். மாவட்ட காணி அதிகாரி திரு. எஸ். சிவஞானம் நேற்று முன்தினம் தமது செயலாளர் பதவியை ராஜினுமாச் செய்தார். இவர் தமது ராஜினுமாக் கடிதத்தை மன்றத்தலைவரான அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவிடம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து புதிய செயலாளராக பொதுஜனத் தொடர்புஅதிகாரி திரு. ஏ. வி. விசுவநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்

திரு. எஸ். சிவஞானம் கடந்தநான்கு ஆண்டுகளாக பிரதேச கலாமன்றத்தின் செயலாளராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. [ந. நி.]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு வாரத்தில் நடைபெற்ற 12 களவுகள்

## நேற்று 5 பேர் கைது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வாரத்தில் நடைபெற்ற 12 களவுகள் சம்பந்தமாக ஐவரை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர். இவர்கள் திருடியதாகச் சொல்லப்படும் சுமார் 1,000 ரூபா பெறுமதியான பொருட்களை பொலிஸார் நேற்று மாலை கண்டுபிடித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸ் சார்ஜன்டுகளான திருவாளர்கள் நவரத்தினம், கனகரத்தினம் ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, ஸ்டான்லி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் ஐக்கிய பண்டசாலை ஆகிய இடங்களில் நடைபெற்ற திருட்டுகள் சம்பந்தமாக இந்த ஐவரையும் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட ஐவருள் மூவர் வாலிபர்கள் எனவும் அறியப்படுகிறது.

இவர்கள் திருடியதாகச் சொல்லப்படும் சைக்கிள் உபகரணங்கள், வானொலிப் பெட்டி, கற்பூரப் பெட்டிகள், பிடிக் கட்டுகள், வெந்நீர்ப் போத்தல்கள், டோர்ச் லைட்டுகள், சிகரட் பெட்டிகள் ஆகியவற்றை அச்சுவேலி, பருத்தித்துறை, மந்திகை ஆகிய இடங்களிலுள்ள கடைகளிலிருந்தே பொலிஸார் மீட்டுள்ளனர். இப்பொருட்களைத் திருடியவர்கள் குறைந்த விலைக்கே இப்பொருட்களைக் கடைக்காரர்களுக்கு விற்றதாகப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இவர்கள் திருடியதாகச் சொல்லப்படும் சுமார் 800 ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், ரொக்கப்பணத்தையும் நேற்றிரவு பொலிஸார் சாவகச்சேரியில் கண்டிபிடித்தனர்.

கைதுசெய்யப்பட்ட ஐவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக மேலும் 7 பேரைப் பொலிஸார் தேடி வருகின்றனர். ந நி.

# பொதுவேலைநிறுத்தம் சாத்தியம் இல்லை

## அரசாங்க லிகிதர் சங்கம் பிரதமருடன் பேட்டி

கொழும்பு, செவ்.

இடதுசாரிக் கட்சிகள் நடத்திய எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட தொழிற்சங்கங்களுக்கு வேலைநிறுத்தம் ஒன்றில் இறங்கும் உத்தேசம் இல்லையென்று தெரிகின்றது.

தொழிற்சங்கப் பிரமுகர்களைப்பொறுத்தவரை வேலைநிறுத்தம் தற்போதைய நிலையில் அவசியமில்லை என அவர்கள் கருதுவதாகத் தெரிகின்றது.

### லிகிதர் சங்கம் பிரதமருடன் பேட்டி

அரசாங்க லிகிதர் சேவை சங்கத்தின் தூதுக்குழு இன்று பிரதமரை சந்தித்து மூன்று மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியது. அரசாங்க லிகிதர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்றும், ஜனவரி 8 வேலைநிறுத்தத்தின்போது தண்டனைக்குள்ளான ஊழியர்களின் தண்டனையை வாபஸ் பெறவேண்டுமென்றும் அவர்கள் பிரதமரிடம் சமர்ப்பித்திருந்த குறிப்பில் கோரியிருந்தனர். பதில் நிதிமந்திரி திரு. என். விமலசேன மற்றும் அதிகாரிகளும் இப்பேச்சுவார்த்தையின்போது கலந்துகொண்டனர். லிகிதர் சங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட தூதுகோஷ்டிக்குச் சங்கத் தலைவர் திரு. ஐ. ஜே. விக்கிரமா தலைமைவகித்தார்.

சங்கத்தினரின் முதலாவது கோரிக்கைக்குப் பிரதம மந்திரி பதிலளித்தபோது, அரசாங்க ஊழியர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள அலவன்ஸை சுட்டிக்காட்டினார். தற்போதைய நிதி நிலைமை முன்னரைவிட மோசமாக இருப்பதாகவும் நிதி நிலைமையை ஆராய்ந்த பின்னரே ஒருமுடிவுக்கு வரலாமென்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சங்கத்தினரின் இரண்டாவது கோரிக்கை பற்றிப் பிரதமர் பிரஸ்தாபிக்கையில், அரசாங்கத்தின் கொள்கை விஷயத்தில் அரசாங்க ஊழியர் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கிருக்கக்கூடாதென்றும், சம்பந்தப்பட்ட வேலைநிறுத்தத்தில் ஈடுபட அவர்களுக்கு உரிமை இருக்கவில்லையென்று சுட்டிக்காட்டினார். இதுவிஷயமாக மந்திரிகளுடனும், நிதி மந்திரியுடனும் கலந்த பின் ஒரு முடிவுக்கு வருவதாகப் பிரதமர் வாக்களித்தார்.

பிரதமருடன் நடத்திய பேச்சு குறித்து லிகிதர் சங்கப் பிரதிநிதிகள் மத்தியில் பொதுவாகத் திருப்தி நிலவியது.

# யாழ்ப்பாணத்தில் இடதுசாரி கட்சிநிலை என்ன?

## புளத்சிங்கள எம். பி. ஆராய்வார்

புன்னாலைக்கட்டுவன், செவ்.

இடதுசாரிக் கட்சிகளின் அரசியல் நிலைபற்றியும், எதிர்காலத்தில் எவ்வித அரசியல் கொள்கைகள் உருவாக்கப்படவேண்டுமென்பதுபற்றியும் அரசியற் கருத்துக்களைப் பரிமாறும் நோக்கத்துடன் சமசமாஜக் கட்சி உறுப்பினருள் ஒருவரும் புலத்சிங்கள எம். பி.யுமான திரு. மங்கள முனசிங்கா யாழ்ப்பாணத்தில் உள்ள தமது ஆதரவாளருடன் மாநாடு ஒன்றை நடாத்தவிருக்கிறார். அநேகமாக 4 நாட்கள் அவர் இங்கு தங்கக்கூடுமெனத் தெரிகிறது.

மாணவர்கள்

# ஒழுங்கீனமாக நடந்தால் பாடசாலையிலிருந்து கல்தா?

யாழ்ப்பாணம், புதன்

ஒழுங்கீனமாகவும், வீதிகளில் காடைத்தனமாகவும் நடந்துகொள்ளும் மாணவர்கள்பற்றி பாடசாலை அதிபர்களுக்குப் புகார்செய்து அது நிருபிக்கப்பட்டால் அவர்கள்மீது கடும் நடவடிக்கையோ அல்லது அவர்களைப் பாடசாலையைவிட்டி நீக்கவோ நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு நேற்று நடைபெற்ற கல்லூரி அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள் மகாநாட்டில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு ஆர். சி. தவராஜா, தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பொங்லோ ஆகியோரும் 7 கல்லூரி அதிபர்களும் கலந்துகொண்டனர்.

மாணவர்கள் காடைத்தனத்தை ஒழித்து, எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென கல்லூரியில் விளக்க வேண்டுமெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டதோடு, இதுபற்றி ஈழநாடு ஸ்தாபனத்தார் வெளியிட்ட துண்டுப்பிரசுரமும் பாடசாலைகளில் விநியோகிக்க அதிபர்களுக்கு, பொலிஸ் சுப்பிரின்டனால் வழங்கப்பட்டது. [ந. நி.]

## எதிரிகளின் பெயர்களை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வழக்கில்உருத்திரபுரத்தில் 66-ம் ஆண்டு இக்டோபர் 13-ம் தேதி, கந்தையா இரத்தினம், சின்னவன் பொன்னையா ஆகியோர் தனுஷ்கோடிசண்முகம், சண்முகம் நடராசா ஆகியோரைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

முதலாம் எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் எஸ். அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். 2-ம் எதிரிசார்பில், அட்வகேட் எம். எஸ். சுந்தரலிங்கம் புறக்டர் ஏ. ரி. ஜி. பிரிட்டோவின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் வி. பரமானந்தம் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் அலோய் இரத்னயக்கா ஆஜரானார்.

முதலாம் எதிரியின் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் குறுக்குவிசாரணை செய்கையில் அமரசிங்கம் கூறியதாவது: துரைசாமி சுப்பிரமணியம் ஆகியோரிடம் நான் எதிரிகளின் பெயரை கூறவில்லை.

துரைச்சாமியிடம் நான் பொலிஸ் விதானைக்கு அறிவிக்கும்படியும் நான் கூறவில்லை

வழ: சூடு விழுந்தபின் இரவில் காட்டுக்குள் போகப் பயப்படவில்லையா? — நான் காட்டுக்குப் போகவில்லை.

வழ: படலைக்கு வெளியில் போனீர்?— ஆம்.

நீதியரசர்: இனத்தவர்கள் எவரும் யார் சுட்டது என்று கேட்டார்களா?- முத்தஅக்கா கேட்டபோது ஆளைத் தெரியும் சொல்ல மாட்டேன் என்றேன். பெயரைச்சொன்னால் என்னையும் சுட்டுவிடுவார்கள் என்ற பயத்தின் காரணமாக கூறவில்லை.

நீதியர. இரகசியமாகஏன் உன்அக்காவிடம் கூறவில்லை? கூறினால் அக்கா எதிரிகளின் பெயரைச்சொல்லிக் குளறுவார்.

வழ: பெயரைச்சொல்லிக் குளறவேண்டாமென்று அக்காவிடம் கூறியிருக்கலாமே? அந்நேரம் நினைக்கவில்லை.

நீதி: 6-ம் எதிரி அடுத்த வீட்டுக்காரர்?- ஆம்.

நீதி: 5.ம் எதிரி1-ம்எதிரி வீட்டுக்குமுன் வீட்டுக்காரர்? ஆம்.

வழ: பொலிஸ் வாக்குமூலத்தில்இரத்தினம் பொன்னையா சுட்டுப்போட்டுப் போனார்களென அக்காவுக்கும் அத்தானுக்கும் கூறியதாக சொன்னீரா?- இல்லை.

நீதி: பொலிஸாருக்கு உண்மையைசொன்னீரா? அந்நேரம் கவலையாயிருந்தேன்.

நீதி: கிட்டத்தட்ட உண்மையை சொன்னீர்? ஆம்.

வழ: துவக்கை முறித்து தோட்டாபோட்டதைக் கண்டீரா? -இல்லை.

வழ: மாஜிஸ்திரேட்டிடம் 1-ம் எதிரிதுவக்கை முறித்து தோட்டாபோட்டதை லைட் வெளிச்சத்தில் கண்டதாக கூறினீரா?- ஞாபகமில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

# ‘இஸ்ரேல் பின்வாங்கினால் அதற்கே நல்லது’

## மேற்காஸிய நிலைமைபற்றி கிருஷ்ணமேனன்

வெள்ளவத்தை, செவ்வாய்

இஸ்ரேல், தான்கைப்பற்றியுள்ள இடங்களை விட்டுப் பின்வாங்கி சென்றால் அந்த நாட்டுக்கே அது நன்மை பயக்கும். ஏனென்றால், இப்போது பிடிபட்ட பிரதேசங்கள் இஸ்ரேலிடமிருந்த போதிலும் இன்னும் சில காலத்தில் அந்த இடங்களை விட்டுப்போக வேண்டிய நிலைமை அதற்கு ஏற்படும்.

இவ்வாறு இந்திய ராஜதந்திரியும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சருமான திரு. கிருஷ்ணமேனன் இன்று ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார். கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. மேனன் மேற்காசிய நிலைமை குறிந்து விளக்கினார்.

## சிங்கள சினிமா ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

வேண்டும் என்பதே எனது ஆசை.’’

இவ்வாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் ஹாவ்லொக் டவுண் லும்பினித் தியேட்டரில் கொழும்பு உதய சூரியன் நாடக மன்றத்தாரால் நடாத்தப்பட்ட ‘போர் முரசு’ நாடகத்தின் போர் சிங்களத் திரைப்படநடிகர் திரு. காமினி பொன்சேகாவுக்கு ‘மக்கள் அன்பன்’ என்ற பட்டத்தையளித்துப் பாராட்டிப் பேசுகையில் கூறினார்.

உதவி உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா, திரு. காமினி பொன்சேகாவுக்கு ‘ஜனரஞ்சன’ என்ற பட்டத்தையளித்துக் கௌரவித்துப் பேசுகையில், ‘இலங்கையிலுள்ள தமிழ் நாடகக் கலைஞர்கள் ஒருசிங்கள நடிகருக்குக் கௌரவமளிப்பதையிட்டுப் பெருமைப்படுகிறேன். கலை எல்லோருக்கும் பொதுச்சொத்து. காமினி பொன்சேகாவைக் கௌரவித்ததன் மூலம் இந்நாட்டுத் தமிழ் மக்களின் பரந்த உள்ளமும் பண்பும், பெருமையும் இன்னும் ஒரு படி உயர்ந்துள்ளது. கலைஞர்கள் நாட்டு மக்களின் ஒற்றுமைப் பாலமாகத் திகழவேண்டும்’ என்று கூறினார்.

சிங்களத் திரைப்பட முன்னணி நடிகர் திரு. காமினி பொன்சேகா பேசுகையில், ‘‘இன்று நீங்கள் எனக்களித்த கௌரவம் எனக்கு மட்டும் உரியதல்ல இந்நாட்டின் கலைஞர்கள் அனைவருக்கும் உரியது, எனக்களித்த கௌரவம் இந்நாட்டின் தமிழ்-சிங்கள மக்களின் இனஒற்றுமைக்கும் சகோதரத்துவத்திற்கும் வழியாகும்.

## ஐயாறன்

[2 ம் பக்கத் தொடர்ச்சி]

நோக்கமாக இருக்கவேண்டும். இன்று உலகில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சங்கடங்கள் கொஞ்சமல்ல. ‘‘தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்’’ என்று பாடினார் அவர். இன்று தனி ஒருவனுக்கு மட்டுமல்ல, பலருக்கு உணவில்லை என்ற நிலைஏற்பட்டு, பலர்பட்டினியால் சாவதாகவும் தெரிகிறது. இந்நிலையில் பல பல புரட்சி இயக்கங்கள் ஏற்பட்டு, அழிவு வேலைகள் நடப்பதாயின், அதில் என்ன வியப்பு.

‘‘இரந்தும் உயிர் வாழ வேண்டின் பரந்து கெடுக உலக இயற்றியான்’’ என்றார், திருவள்ளுவப் பெருந்தகை. இரந்தும் உயிர்வாழ முடியாத நிலை இன்று துரதிருஷ்டமாக ஏற்பட்டுவருகிறது. இந்நிலையில் நாத்திகம் தலைதூக்குவதாயின், அதுவும் இயற்கைதானே!

புரட்சிக்காரர்களெல்லாம் ஒழித்துக்கட்டவேண்டுமென்றும் அப்போதுதான் நாட்டுக்கு விமோசனம் பிறக்குமென்றும் இந்தியாவில் ஒரன்பர் ஆத்திரத்துடன் கூறி, அடுத்த மூச்சில், அது முடியாத காரியமென்று அவரே சொன்னார். பாவம்! இதற்கு ஒரு ஆக்க வழி இருக்கத்தானே வேண்டும். தெய்வ நம்பிக்கையையும் பத்தியையும் அதன் மூலம் அன்பையும் வளர்ப்பதாயின், சுயநலம் குறைந்து மக்கள் சங்கடங்களும் தீர்ந்து அவர்கள் தெய்வீக வாழ்வு வாழலாமல்லவா? பாரதியார் எழுதிவைத்துள்ள கவிதைச் செல்வங்கள் இந்த நோக்கத்துக்காக நமக்கு வழிகாட்டுகின்றனவல்லவா?

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org